நல்லூர் இனை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper   பக்கங்கள் 04   விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM   Peoples Daily   மக்கள் தினசரி

நாதம் 04   திருவள்ளுவர் ஆண்டு 2024   சித்திரை 26   [09-05-93]   ஞாயிற்றுக்கிழமை   ஓசை 80

## வடமராட்சி கிழக்கில் மலேரியா 3 மாதங்களில் 2474 பேர் சிகிச்சை

மருதங்கேணி அரசினர் வைத்தியசாலையில் கடந்த மூன்றுமாதங்களில் 'மலேரியா' நோய்க்கு 2474 பேர் சிகிச்சை, பெற்றுள்ளார்கள். இந்த நோயாளரின் தொகைமாதாமாதம் அதிகரித்தே செல்வதாக வைத்தியசாலை வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது. கடந்த நவம்பர் மாதம் இந்நோய்க்கு சிகிச்சை பெற்றவர்களின் தொகையிலும், கடந்த மார்ச் மாதம் சிகிச்சை பெற்றவர்களின் தொகை இரண்டு மடங்குக்குமேல் அதிகரித்துள்ளது. இவ் வைத்தியசாலையில் இரத்தப்பரிசோதனை செய்வதற்கு கருவியாளர் இல்லாமையினால், மலேரியா நோயாளருக்கு, உடனடி சிகிச்சைஅளிப்பதில் சிரமம் காணப்படுகின்றது. இவ் வைத்தியசாலைச் சுற்றாடலில் உள்ள உடுத்துறை, மருதங்கேணி, செம்பியன் பற்று ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்களே கூடுதலாக [4ஆம்பக்கம் பார்க்க]

# இனப் பிரச்சினைக்கான தீர்வில் கொள்கை மாற்றம் எதுவுமிராது!

## புதிய அரசின் நிலைகுறித்து கணிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினை தொடர்பாக புதிய அரசாங்கத்தின் அணுகுமுறையில் பெரும் மாற்றங்கள் எதுவும் ஏற்பட வாய்ப்பில்லை எனவும், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் அணுகுமுறையை ஒத்ததாகவே பெரும்பாலும் புதிய அரசாங்கத்தின் அணுகுமுறை இருக்கும் என்றும் கொழும்பிலுள்ள அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புதிய ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க வடக்கு, கிழக்குப் பிரச்சினை முக்கிய கவனத்திற் கொள்ளப்படும் எனத் தெரிவித்துள்ளபோதும் புதிய அரசாங்கம் பிரேமதாசா அரசாங்கத்தின் ஏனைய கொள்கைகள் யாவற்றையும் கடைப்பிடிப்பது போன்றே இனப்பிரச்சினை குறித்த கொள்கையும் கடைப்பிடிக்கப்படுமெனத் தெரிவிக்கின்றனர்.

இதற்கு எடுத்துக்காட்டாக பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் சிபார்சுகளைத் தான் எதிர்பார்த்திருப்பதாக புதிய ஜனாதிபதி தெரிவித்துள்ளமையையும், விடுதலைப் புலிகளின் ஆயுதத்தைக் களைய வேண்டும் எனவும் குறிப்பிட்டதைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் புதிய அமைச்சரவையில் பெரும்பாலும் பழைய முகங்களே இடம்பெறுவதனாலும், அவர்களின் செயலாளர்களும் பழையவர்களாக இருப்பதனாலும் இனப்பிரச்சினை தொடர்பாக இப் புதிய அரசாங்கத்தின் கொள்கையில் பெரும் மாற்றங்கள் இருப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினராக

## டி. பியின் இடத்திற்கு ராஜு சின்னச்சாமி

கண்டி மாவட்டத்திலிருந்து புதிய பாராளுமன்ற உறுப்பினராக ராஜு சின்னச்சாமி தெரிவு செய்யப்படவுள்ளார். கண்டி தேர்தல் மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினரான டி. பி. விஜயதுங்கா ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதைத் தொடர்ந்து அவரது பாராளுமன்றப் பதவி வெற்றிடமாகியது. இவ்வெற்றிடம் இ. தொ. கா. சார்பில் தேர்தலில் ஐ. தே. க. சின்னத்தில் போட்டியிட்ட ராஜு சின்னச்சாமி என்பவரால் நிரப்பப்பட இருப்பதாக தெரியவருகின்றது.

## நிதி அமைச்சராக தொடர்ந்தும் விஜயதுங்கா

(கொழும்பு)

சிறிலங்காவின புதிய ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா பாதுகாப்பு அமைச்சு, புத்தசாசன அமைச்சு, கொள்கைத்திட்டமிடல் செயற்படுத்துகை அமைச்சு, தொழில், சமூக நலன் பேணல் அமைச்சு, மற்றும் நிதிஅமைச்சு என்பவற்றை தம்வசம் வைத்துள்ளார்.

பிரதமராக பதவி ஏற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து கைத்தொழில் அமைச்சராகப் பதவி வகிப்பதுடன் சபை முதல்வராகவும் அவர் பதவி வகிப்பார்.

## பிரேமாவின் கொள்கையை பின்பற்ற வேண்டும்

(கொழும்பு)

\- கணேசலிங்கம்

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் கொள்கைகளை இனிவரும் தலைவர்களும் பின்பற்ற வேண்டும் என்று கொழும்பு மாநகரப் பிரதிமேயர் கே. கணேசலிங்கம் கேட்டுள்ளார். குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில் மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா எந்த இலட்சியத்திற்காக வாழ்ந்தார் என்பது புதிய ஜனாதிபதிக்கு

## தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு இலங். - இந்திய ஒப்பந்தமே

\- ஜே. ஆர். தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு தற்போது உள்ள தீர்வு இலங்கை - இந்திய ஒப்பந்தம் தான் என முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இவர் தற்போது அரசியலில் இருந்து ஒதுங்கி நின்றபோதும் தற்போதைய ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறி வருகின்றார் என ஏ. எவ். பி. செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்காவின் அரசியல் யாப்பின்படி இனப்பிரச்சினைக்கு இலங்கை-இந்திய ஒப்பந்த மூலமே தீர்வு காணப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

மட்டு. மாவட்டத்தில் மட்டும்

## ஒன்பது வருடங்களில் 20 ஆயிரம் தமிழர் கொலை

கடந்த ஒன்பது வருடகாலப் பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் சுமார் இருபதினாயிரத்து நாற்பது தமிழர்கள் சிங்களப் படைகளின் தாக்குதல்களினால் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் 1990 ஆம் ஆண்டு முதல் சுமார் 827 அரச ஊழியர்களும் அடங்குவர் என்று தெரியவருகிறது.

## கொழும்புத்துறையில் கரையொதுங்கிய சடலம்

யாழ். கொழும்புத்துறை-உதயபுரம் பகுதிக் கடலில் நேற்று முன்தினம் காலை அழுகிய ஆணின் சடலம் ஒன்று கரை ஒதுங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சடலத்தின் தொடைப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயம் காணப்பட்டது.

நீலநிற உள்ளாடையுடன் காணப்பட்ட சடலத்தில் இருந்து பெறப்பட்ட வேறு தடயப் பொருள்கள் இந்திய நாணயம் எனவும்-

அப்பகுதி மக்கள் யாழ். காவல்துறை பணிமனைக்கு அறிவித்ததை அடுத்து சடலத்தை மீட்டெடுத்த காவல்துறையினர் மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்திருந்த சடலத்தை அடையாளம் காணப்படாமலே அடக்கம் செய்தனரென்று அறிவிக்கப்படுகிறது. (21)

## ஜனநாயக அரசியல் முறை புதிய திட்டங்கள் தேவை

ஐலன்ட் தெரிவிப்பு

துப்பாக்கி ரவைகள், வெடிகுண்டு, சயனைட் அரசியலிலிருந்து விடுபட்டு ஜனநாயக அரசியல் முறையில் தீர்வுத் திட்டங்களை புதிய ஜனாதிபதி வகுக்க வேண்டும் என 'ஐலன்ட்' பத்திரிகை கருத்துத் தெரிவித்துள்ளது.

இதுவே இன்றுள்ள முக்கிய பணி இதன் மூலமே முழு நாட்டையும் கட்டிக்காக்க முடியும் என்பதை தற்போதைய ஜனாதிபதி நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும்.

"அரசியல்வாதிகள் வாக்குகளைமட்டும் கருத்திற் கொள்ளாது நாட்டு நலனையும் கருத்திற் கொள்ளவேண்டும். வேட்டுக்கள் மூலம் பிரச்சினையை நிரந்தரமாக தீர்க்கமுடியாது" என மேலும் கருத்து தெரிவித்துள்ளது.

## ஹேமாவின் அறிவிப்பு பலருக்கு சங்கடம்

\-ரவய ஆசிரியர் தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் இறுதிக் கிரியையின்போது திருமதி ஹேமா

வும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதிபிரேமதாசாவின் மரணம் லலித்தின் மரணத்

## நிதி அமைச்சராக தொடர்ந்தும் விஜயதுங்கா

(கொழும்பு)

சிறிலங்காவின புதிய ஜனாதிபதி டி. பி. விஜபதுங்கா பாதுகாப்பு அமைச்சு, புத்தசாசன அமைச்சு, கொள்கைத்திட்டமிடல் செயற்படுத்துகை அமைச்சு, தொழில், சமூக நலன் பேணல் அமைச்சு, மற்றும் நிதிஅமைச்சு என்பவற்றை தம்வசம் வைத்துள்ளார்.

பிரதமராக பதவி ஏற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து கைத்தொழில் அமைச்சராகப் பதவி வகிப்பதுடன் சபை முதல்வராகவும் அவர் பதவி வகிப்பார்.

## பிரேமாவின் கொள்கையை பின்பற்ற வேண்டும்

- கணேசலிங்கம்

(கொழும்பு)

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் கொள்கைகளை இனிவரும் தலைவர்களும் பின்பற்ற வேண்டும் என்று கொழும்பு மாநகரப் பிரதிமேயர் கே. கணேசலிங்கம் கேட்டுள்ளார்.

படுகொலையைக் கண்டு பயம் கொள்ள வேண்டாம் என்று அமைச்சர் தொண்டமான் நேற்று பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்தும போது குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில் மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா எந்த இலட்சியத்திற்காக வாழ்ந்தார் என்பது புதிய ஜனாதிபதிக்கு தெரியாமல் இருக்க முடியாது. நாம் எல்லோரும் இலங்கை மாதாவின் பிள்ளைகள் என்ற ரீதியில் அவர் செயற்பட்டார் என்றும் தெரிவித்தார்.

## தேசிய அரசாங்கம் குறித்து ஆலோசிக்க கோரிக்கை

(கொழும்பு)

காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசாவின் எஞ்சிய பதவிக் காலத்திற்கு தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது பற்றி ஆலோசிக்கும்படி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் ஜனாதிபதி டி. பி.விஜயதுங்காவிடம் கோரியுள்ளார்

ஜனாதிபதிக்கு அஷ்ரப் எழுதியுள்ள கடிதம் ஒன்றில் மேலும் குறிப்பிடுகையில், பாராளுமன்றம் முழுவதையும் அரசியல் அமைப்பு சட்டத்தை திருத்துவதற்கான அசெம்பிளியாக மாற்றி சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் பேகர் இன மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையிலும், ஜனநாயகத்தை பலப்படுத்தவும் கூடிய வகையிலும் அரசியலமைப்பு சட்டத்திற்கு போதுமான திருத்தங்களை கொண்டு வருவது அல்லது புதிய அரசியலமைப்பை வரைவது பற்றியும் ஆலோசிக்கும்படியும் கூறியுள்ளார்.

## அமைச்சின் செயலாளர்கள் ஜனாதிபதியால் நியமனம்

(கொழும்பு)

ஜனாதிபதியாக பதவி ஏற்றுள்ள டி. பி. விஜயதுங்கா பல்வேறு அமைச்சுகளுக்குமான செயலாளர்களை நேற்று நியமித்தார். 26 ராஜாங்க அமைச்சர்களும் நியமிக்கப்பட்டனர்.

ஜனாதிபதியின் செயலாளர் - கே எச்.ஜே. விஜேதாசா

புத்த சாசன அமைச்சு செயலாளர் - டி.எம். பி பி. தசநாயக்க

பாதுகாப்பு அமைச்சு செயலாளர் - ஏயார்மார்ஷல் ஏ.டபிள்யூ பெர்னாண்டோ

கொள்கைத்திட்டமிடல் நிதிஅமைச்சு செயலாளர் -ஆர்.பாஸ்கரலிங்கம்

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளர் -பி.பி. திலகரட்ணா

காணி, காணி அபிவிருத்தி நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சு செயலாளர் - ஜி.டி. பிரேமச்சந்திரா

விவசாய அபிவிருத்திஆராய்ச்சித்துறைஅமைச்சு செயலாளர் - டி.நிலவீர

உணவு, கூட்டுறவு ஜனசக்தி அமைச்சு செயலாளர் - லீலா ரத்தினா

கடற் தொழில் நீரியல் வளங்கள் அமைச்சு செயலாளர் - வேரகொட

பொதுநிர்வாக மாகாணசபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளர் - எம் எம்.ஜுனைட்

வர்த்தக வாணிப அமைச்சு -ஆர்.ஏ.கே. குணதிலக்க

துறைமுக கப்பல்துறை அமைச்சு - கே கே.தஸநாயக்கா

பெருந்தோட்டத் தொழில்துறை அமைச்சு -ஆர்.எச். தயாரத்தினா [4ஆம் பக்கம் பார்க்க]

கள் யாவற்றையும் கடைப்பிடிப்பது போன்றே இனப்பிரச்சினை குறித்த கொள்கையும் கடைப்பிடிக்கப்படுமெனத் களின் ஆயுதத்தைக் களைய வேண்டும் எனவும் குறிப்பிட்டதைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் புதிய அமைச்சர பெரும் மாற்றங்கள் இருப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளனர்.

## தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு இலங். - இந்திய ஒப்பந்தமே

- ஜே. ஆர். தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு தற்போது உள்ள தீர்வு இலங்கை - இந்திய ஒப்பந்தம் தான் என முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இவர் தற்போது அரசியலில் இருந்து ஒதுங்கி நின்றபோதும் தற்போதைய ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறி வருகின்றார் என ஏ. எவ். பி. செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்காவின் அரசியல் யாப்பின்படி இனப்பிரச்சினைக்கு இலங்கை-இந்திய ஒப்பந்த மூலமே தீர்வு காணப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

## புலிகள் - அரசு பேச்சு விரைவில் சாத்தியமில்லை

பி.பி.ஸி விமர்சனம்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசாவின் மரணத்துக்குப்பிறகு கொலை தொடர்பான சந்தேகம் புலிகள் பக்கம் திரும்பியுள்ளது. இப்படியான ஒரு பின்புலத்திலும் புலிகளுடன் அல்லது பிரபாகரனுடன் விரைவில் பேச்சுவார்த்தை நடைபெறும் என்று நான் கருதவில்லை — இவ்வாறு பி.பி.ஸிக்கு லூசியன் ராஜகருணநாயக்கா தெரிவிக்கிறார்.

சமாதானப்பேச்சுவார்த்தை தொடர்பாக மேலும் பல தீர்க்கமான அணுகுமுறைகள் கையாளப்படவேண்டும் அல்லது வடக்கில் இராணுவ அழுத்தத்தை அதிகரிக்கவேண்டும் என்று தெற்கில் வாழும் மக்கள் கருதுகிறார்கள் என்கிறார் அவர்.

டி.பி. விஜயதுங்கா பலவீனமான ஆளுமை உள்ளவர் போல் தோன்றலாம். ஆனால் அவர் தமது 71 வயதுக்கிடையில் பல அமைச்சுப் பொறுப்புகளை ஏற்றுள்ளார். தபால் தொலைத்தொடர்பு அமைச்சராகவும் நிதி அமைச்சராகவும் கடமையாற்றி உள்ளார்.

அவர் ஜானாதிபதியாகப்பதவிப் பிரமாணம் செய்த பிறகு அவரை எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு குறிப்பாக நாட்டில் தலைமைத்துவம் இல்லை என்ற சவாலுக்கு முகம் கொடுக்க அவர் தன்னை தயார்படுத்தி உள்ளார். ஜனாதிபதி பதவி ஏற்ற பிறகு விஜயதுங்கா கருத்துத் தெரிவிக்கையில் ஜே. ஆர் ஜெயவர்தனா மற்றும் ஆர். பிரேமதாசாவின் கொள்கைகளைப் பின்பற்றப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு லூசியின் ராஜகருணநாயக்கா பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவிக்கிறார்.

### மீட்பு நிதி சேகரிப்பு

நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி முதல் 10 மணி வரை மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை காலமும் மீட்புநிதிக் கடனைச் செலுத்தத் தவறியோர் இன்று தமது மீட்பு நிதிக் கடனைச் செலுத்த முடியும் என தமிழீழ மீட்பு நிதிப்பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## மக்கள் குடியிருப்பு மீது கடும் பீரங்கித் தாக்கு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு நாகர் கோயில் கடற்பரப்பில்ரோந்து சென்ற சிறிலங்கா கடற்படையினர் மீனவர்கள் மீதும் குடியிருப்புப் பகுதிகள் மீதும் அகோர பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 6 மணியளவில் நடைபெற்றது. இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது, நாகர் கோயில் கடற்பரப்பில் ரோந்து சென்ற கடற்படையினர் கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களையும், பீரங்கித் தாக்குதல்களையும் மேற்கொண்டதாகவும் கடற்படையினரின் இத் தாக்குதலுக்கு மீனவர் படகுகள் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மக்கள் குடியிருப்புப் பகுதிகள் மீதும் பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் இவை பெரும் அதிர்வு சத்தத்துடன் வெடித்ததாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மற்றும் தென்மராட்சிப் பகுதிகளில் நேற்று முன் தினம் இரவு பலத்த குண்டுச் சத்தங்கள் கேட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (யோ)

துப்பாக்கி ரவைகள், வெடிகுண்டு, சயனைட் அரசியலிலிருந்து விடுபட்டு ஜனநாயக அரசியல் முறையில் தீர்வுத் திட்டங்களை புதிய ஜனாதிபதி வகுக்க வேண்டும் என 'ஐலண்ட்' பத்திரிகை கருத்துத் தெரிவித்துள்ளது.

இதுவே இன்றுள்ள முக்கிய பணி. இதன் மூலமே முழு நாட்டையும் கட்டிக்காக்க முடியும் என்பதை தற்போதைய ஜனாதிபதி நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும்.

''அரசியல்வாதிகள் வாக்குகளைமட்டும் கருத்திற் கொள்ளாது நாட்டு நலனையும் கருத்திற் கொள்ளவேண்டும். வேட்டுக்கள் மூலம் பிரச்சினையை நிரந்தரமாக தீர்க்கமுடியாது'' என மேலும் கருத்து தெரிவித்துள்ளது.

## ஹேமாவின் அறிவிப்பு பலருக்கு சங்கடம்

-ராவய ஆசிரியர் தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் இறுதிக் கிரியையின்போது திருமதி ஹேமா பிரேமதாசா ஆற்றிய உரையும், அவர் அரசியலில் ஈடுபடப்போவதாக விடுத்த அறிவிப்பும் எதிர்காலத் தலைமைத்துவத்தை எதிர்பார்த்துள்ளவர்களுக்கு உவப்பானதாக இராது என ராவய ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்தார்.

மேலும்; ஹேமாபிரேமதாசாவின் இவ் அறிவிப்பால் ஐக்கிய தேசியக் கட்சியில் வேறொரு அணியும் உருவாகக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதிபிரேமதாசாவின் மரணம் லலித்தின் மரணத்தால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்ட இடரைகுறைத்திருப்பதாகவும், ஜனாதிபதியின் மறைவு மாகாண சபைத்தேர்தலில் ஐ.தே.க விற்கு வெற்றியைப் பெற்றுத் தரப்போவதில்லை எனவும், தற்பொழுது பலவீனநிலையில் இருக்கும் ஐக்கிய தேசியக்கட்சி மாகாண சபைத்தேர்தலில் ஏற்படவிருக்கும் தோல்வியுடன் மிகவும் பலவீனநிலைக்குத் தள்ளப்படுமென்றும் அவர் தெரிவித்தார்

## வேதாரணியம் கடலில் விசைப்படகு நடமாட்டம்

கரையோர காவல்படையினர் சூடு

(சென்னை)

வேதாரணியம் கடற்கரைக்குச் சமீபமாக ஆற்காட்டுத் துறைக்கு அப்பால் நடுக்கடலில் வேகமாகச்சென்றுகொண்டிருந்த படகு ஒன்றை நோக்கி கரையோரக் காவல் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், எனினும் அப்படகு தப்பி விட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்றது.

இதேவேளை வேதாரணியததில் கடந்த வியாழனன்று [4ஆம் பக்கம் பார்க்க]

## ஜே.வி.பியிற்குள் பிளவு தேர்தல் குறித்து முரண்பாடு

(கொழும்பு)

ஜே. வி. பி. இயக்கத்தில் பிளவு ஏற்பட்டுள்ளதை இரு தலைவர்கள் விடுத்துள்ள செய்திகளிலிருந்து அறிய முடிவதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

ஜே. வி. பி. தொடர்பாக கருத்து தெரிவிக்க எவருக்கும் அதிகாரம் இல்லை என லண்டன் கிளை பேச்சாளர் ஜகாத் சேனாதீர தெரிவித்தார். சோமவன்ச அமரசிங்கா எமது திட்ட செயலாளர் மட்டுமே என்றார் அவர்.

மாகாணசபை தேர்தல் தொடர்பாக பேட்டி அளித்த ஜகாத் சேனாதீரவிற்கு எந்த அருகதையும் இல்லை என்றும் (4ஆம் பக்கம் பார்க்க)

## இன்று 'வெளிச்சம்' வெளிவருகின்றது

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான 'வெளிச்சம்' வைகாசி மாத இதழ் இன்று வெளிவருகின்றது. இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் அவர்கள் வழங்கிய ''கல்வி வாழ்க்கைக்கு அர்த்தத்தைக் கொடுக்கிறது'' என்ற செய்தி இடம்பெறுகின்றது. இதனுடன். கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் 'நலம் நலமறிய ஆவல்!' என்ற கவிதையும், முருகு இரத்தினத்தின் கவிதையும், கே. ஆர். டேவிட். ஆத்திசூடியான் ஆகி [4ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### சேவை

கடைச்சல் பட்டடை (லேத்) வேலையில் நன்கு தேர்ச்சி பெற்ற தொழிலாளர் தேவை. சனி, ஞாயிறு நாட்களில் காலை 9மணி, மாலை 5மணிக்கு நேரில் சமுகம் தரவும். தொடர்பு:- ஜொனி வாகன சுத்திகரிப்பு நிலையம். கல்வியங்காடு சட்டநாதர் கோவில் முன்பாக. (4828)

### கசற் ரேடியோக்களா! கடிகாரங்களா!!

உங்கள் கடிகாரங்களையும், றேடியோக்களையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள்: டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி (சி/6541)

### ஜாம் போத்தல் தேவை

வெற்று ஜாம் போத்தல்கள் கூடிய விலைக்கு கொள்வனவு செய்யப்படும். தொடர்பு:- வேலவன் ஸ்ரோஸ் (நல்லூர் கோவில் முன்பாக) பருத்தித்துறை வீதி, நல்லூர். (4837)

### மேர்வின்ஸ் இடமாற்றம்

91/1, மின்சாரநிலைய வீதி. யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த றபர்சீல் பிளாஸ்ரிக் வேலைகள் செய்யும் எமது ஸ்தாபனம் அதேவீதியில் மலாயன் கபேக்கு முன்பாக இயங்கி வருகிறது என்பதை அறியத் தருகின்றோம். (4836)

### அல்சேஷன் நாய்


நல்ல இன அல்சேஷன் நாய் விற்பனைக்குண்டு ஆண் 240 நாட்கள், பெண் 120நாட்கள்; பூச்சி அகற்றப்பட்டவை. தொடர்பு:- செ. ஆனந்தன் தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. (3398)

### சேவைக்காலப் பயிற்சி வகுப்பு

(கொழும்புத்துறை)

மருதனார்மடம் கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த விவசாய பாட ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்கள் நாளை 10ஆம் திகதி திங்கட்கிழமை இராமநாதன் கல்லூரியில் இடம்

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்ந்தது 27 | 11 | 1970

உதிர்ந்தது 09 | 05 | 1988

கனகரத்தினம

## ஜெகதீஸ்வரன் (ஜெகன்)

(யாழ். பரியோவான் கல்லூரி மாணவன்)

கவிதை ஒன்றும் தோன்றவில்லை - எமக்கு
எம் கண்ணீரும் ஓ வில்லை
பாசம் என்ற தீயினில் எம் நெஞ்சம்
பற்றி எரிகின்றதே
வெந்தணலில் பட்ட மெழுகு போல் துடிக்கின்றோம்
உன் பிரிவுத் துயர் தாங்காது
வருடம் ஐந்து ஆனது இன்று - ஆயினும்
உன் நினைவை மறக்க முடியவில்லை
வருடங்கள் எத்தனைதான் உருண்டாலும்
உன் நினைவுகள் எம் மனதை விட்டகலா
ஆண்டுகள் ஐந்து அதற்குள் பறந்தாலும்
உன நினைவுகளாவது எம்முடன் மிஞ்சட்டுமே.

உன் நினைவுடன் வாழும்

441 கண்டிவீதி
அரியாலை,
யாழ்ப்பாணம்.

அன்பு அப்பா, அம்மா அக்காமார், தம்பி, மருமகன் செந்தூரன், மச்சான், மாமா, மாமி, அம்மம்மா, அப்பம்மா, உற்றார், உறவினர், நண்பர்கள்.

(4821)

## நீ... இல்லாத அந்த நாட்கள்

## மயிலு-இராசையா தனுஷன்

பிறந்தது: 15-5-1992

மடிந்தது: 10-4-1993

பிறந்த 11 மாதங்கள்தான். இன்று இவன் இல்லை.
அன்புத் தனுஷன் நீ எங்கு சென்றாய்
நீ விடடுச்சென்ற நாட்களை
எண்ணிப் பார்க்கின்றோம்.
உன் போன்ற சின்ன மழலைச் செல்வங்கள்
தனுஷன் என்ற வார்த்தைகளுடன்.....
நினைத்துப் பார்க்கின்றார்கள்......
அவர்கள்.................
எங்கு சென்றாயடா,

என்றும் உன்னைப் பார்த்து நிற்கும்,

மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

அம்மா, அப்பா,
அன்பு உறவினர்கள்.

## பிறந்த தின வாழ்த்து (9-05-93)




## செல்வன் நிவாசர்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தெய்வேந்திரன் வதனி தம்பதிகளின் இரண்டாவது செல்வப் புதல்வன் நிவாசர் இன்று தனது முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறார்.

இவரை ஐயா, அம்மா. அண்ணா செந்தூரன், அப்பாச்சி, பெரியையா குடும்பத்தினர், அம்மன் மாமி குடும்பத்தினர், மங்களா மாமி குடும்பத்தினர், கலா மாமி குடும்பத்தினர், கெங்கா மாமி குடும்பத்தினர், ஜெயந்தி மாமி துளசிமாமி, குமரேந்திரன் சித்தப்பா குடும்பத்தினர், மகேந்திரன் சித்தப்பா குடும்பத்தினர். சுரேந்திரன். பூரணசந்திரன், திருமாலழகன், சித்தப்பாமார்கள். அப்பா, அம்மம்மா, அச்சு மாமி, கதிரவேல் சத்திவேல் பெரியப்பாமார், வாசுகி, வாணி, தமிழினி, பகிரதி, துவாரகா, நிவேதா, சர்மிளா, ரஜனி. ராகினி, கல்பனா அக்கா, செல்லக்குமார், லக்ஷன், காண்டீபன், ரகுபரன், ரஜித்குமார் அண்ணாமார், குகதாஸ், குமரதாஸ், செந்தில் குமரன், இளையராஜ், கிருஷ்ணராஜ், திவாகர், மச்சான்மார், ஜமுனா, காஞ்சனா. கனிதா. நர்மதா, தனுசியா, மச்சாள்மார், கற்கண்டுமாமா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரும் வல்வை முத்துமாரி அம்மன் ஆசியால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

(சி/6586)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி




## நியூட்டன் அக்கடமி

இருபாலை றோட், கோண்டாவில்

(O/L DAY CLASS இற்கு தனித்துவமான ஒரே ஒரு நிறுவனம்)

## O/L DAY CLASS-1993

பிரிவு-II

வரலாறு சமூகக் கல்வி **திரு. கணேஷ்**

ஆரம்பம்:- 9-5-93 பி. ப. 4 மணி

முக்கிய குறிப்பு:-

★ வரலாறு, சமூகக்கல்வி; செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு ஆகிய 4 தினங்களிலும் பகல் வேளைகளில் நடைபெறும்.

★ முன் கூட்டியே அனுமதியைப் பெற்றுக் கொள்ளுங்கள். (4835) —நிர்வாகி


## ஈராண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 05 - 01 - 1933



தாயகம் விடிவில் 04 - 05 - 1991

## திருவாளர் வடிவேல் மகேசு

அவர்கள்

(பணிப்பாளர் சபை உறுப்பினர், பல நோ. கூ. சங்கம் பருத்தித்துறை)

திதி: 09-05-1993

ஈராண்டு மறைந்தாலும் ஆறவில்லை எம்துயர்
மலர்ந்து மறைந்தாலும் மறவாத உன் தொண்டு
திசை எங்கும் சேவை உள்ளத்தால்
உயர்ந்து நின்றாய்
மக்களின் மனதினிலே மாறாது காணாதையா
அசந்த வேளையிலே எம்மை அதிர வைத்து
மறந்து விட்டாயே - ஐயா
தீராத துயரமதில் உம் தென்புடனே
ஆறுகின்றோம்.

என்றும் உங்களை நினைவு கொள்ளும்

மதவடி,
பொலிகண்டி.

மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள், நண்பர்கள்.

[4818]

## நினைவு கூருகின்றோம் ... 1993-05-09

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ். உடுப்பிட்டியில் இராணுவ அதிகாரி மெண்டீஸ்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

தருகின்றோம். (4836)

## அல்சேஷன் நாய்

நல்ல இன அல்சேஷன் நாய் விற்பனைக்குண்டு ஆண் 240 நாட்கள், பெண் 120நாட்கள்; பூச்சி அகற்றப்பட்டவை. தொடர்பு:- செ ஆனந்தன் தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. (3398)

## சேவைக்காலப் பயிற்சி வகுப்பு

(கொழும்புத்துறை)

மருதனார்மடம் கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த விவசாய பாட ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்கள் நாளை 10ஆம் திகதி திங்கட்கிழமை இராமநாதன் கல்லூரியில் இடம் பெறவுள்ளது (24)

## மயிலு-இராசையா தனுஷன்

பிறந்தது: 15-5-1992

மடிந்தது: 10-4-1993

பிறந்த 11 மாதங்கள்தான். இன்று இவன் இல்லை.
அன்புத் தனுஷன் நீ எங்கு சென்றாய்
நீ விடடுச்சென்ற நாட்களை
எண்ணிப் பார்க்கின்றோம்.
உன் போன்ற சின்ன மழலைச் செல்வங்கள்
தனுஷன் என்ற வார்த்தைகளுடன்......
நினைத்துப் பார்க்கின்றார்கள்......
அவர்கள்..................
எங்கு சென்றாயடா,

என்றும் உன்னைப் பார்த்து நிற்கும்,

மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

அம்மா, அப்பா,
அன்பு உறவினர்கள்.

(சி-6585)

யாழ்/திருமறைக்கலாமன்றம் நடாத்தும நாட்டுக்கூத்து விழாவில்

## 9-05-1993 ஞாயிறு (இன்று) பி.ப. 8.00 மணிக்கு

## ★ கண்ணகை வழக்குரை ★

(முல்லைத்தீவு ஆட்டமுறையில் ஆட்ட நாட்டுக்கூத்து)

தயாரிப்பு, ஆட்டப்பயிற்சி, நெறியாள்கை

## செல்லையா மெற்றாஸ்மயில்

நடிகர்கள்

கோவலன் — திரு ச. உதயன் (எழுதுவினைஞர்)
கண்ணகி — சுபந்தினி ஞானச்செல்வன் (மாணவி)
நட்டுவன் — திரு யோ யோன்சன் ராஜ்குமார் (ஆசிரியர்)
மாதவி — செல்வி ந கமலேஸ்வரி (நடன ஆசிரியை)
கட்டியகாரன் — செல்வன் க ஸ்ரீராம் (மாணவன்)
பாண்டியன் — திரு செ. மெற்றாஸ்மயில் (அ. உ. வேலணைக்கல்விக்கோட்டம்)
கோப்பெருந்தேவி — செல்வி கலா அன்ரன் (நடனமாணவி)
மந்திரி — திரு ஏ. எல்விஸ் (ஆசிரியர்)
பொற்கொல்லன் — திரு ச. சிவராசா (ஆசிரியர்)
பிள்ளைகள், மழுவர்கள் — செல்வன் ந. தருமராசா (மாணவன்)
செல்வன் செ. சுபாகரன் (மாணவன்)
கண்ணகை (காளி) — செல்வி வாசுகி ஞானச்செல்வம் (நடனஆசிரியை)
பின்னணிப்பாடகர்கள் — திரு. வி. எம். ஜெராட் (மூத்தகலைஞர் குருநாதர்)
திரு. ப. கனகராசா (ஆய்வுகூட உதவியாளர் யாழ் இந்துக்கல்லூரி)
திரு. மு பா. முத்துக்குமார் (ஆசிரியர்)
திரு வே வேணுகாந்தன் (மருத்துவபீடம்)
செல்வி சி இராஜரட்ணம் (சங்கீத ஆசிரியை)
செல்வி ஜெ சண்முகநாதன் (சங்கீத ஆசிரியை)
திருமதி அ. தனபாலசிங்கம் (சங்கீத ஆசிரியை)
செல்வி ச தம்பிராசா (இராமநாதன் அக்கடமி)
ஆர்மோனியம் — நவாலியூர் சி. என் செல்லத்துரை
மிருதங்கம் — அரியாலையூர் திரு ச கந்தவனம்
உடையலங்காரம், ஒப்பனை — ஸ்ரனிஸ் மாஸ்ரர்
ஒலி, ஒளி — திருமறைக்கலாமன்றம், யாழ்ப்பாணம்.


ஓவியங்களில் நிலைத்து நிற்பது

அஜந்தா

இன்று

புகைப்படக் கலைக்கொரு புகழிடம்

(சி 6591)

அன்பளிப்பு


NALLUR Ajanthaa PHOTO JAFFNA

63. சங்கிலியன் வீதி, நல்லூர்
(தற்போதைய யாழ். மாநகரசபையின் பின்புறம்)


தினர், மகேந்திரன் சித்தப்பா குடும்பத்தினர், சுரேந்திரன், பூரணசந்திரன், திருமாலழகன், சித்தப்பாமார்கள், அப்பா, அம்மம்மா, அச்ச மாமி, கதிரவேல் சத்திவேல் பெரியப்பாமார், வாசுகி, வாணி, தமிழினி, பகிரதி, துவாரகா, நிவேதா, சர்மிளா, ரஜனி, ராகினி, கல்பனா அக்கா, செல்லக்குமார், லக்ஷன், காண்டீபன், ரகுபரன், ரஜித்குமார் அண்ணாமார், குகதாஸ், குமரதாஸ், செந்தில் குமரன், இளையராஜ், கிருஷ்ணராஜ், திவாகர், மச்சான்மார், ஜமுனா, காஞ்சனா, கனிதா, நர்மதா, தனுஜியா, மச்சாள்மார், கற்கண்டுமாமா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரும் வல்வை முத்துமாரி அம்மன் ஆசியால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

(சி/6586)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி லெட்சுமி கதிர்காமத்தம்பி (மயில்வாகனம்)

மலர்வு: 07. 06. 1950

உதிர்வு: 07. 05. 1988

அன்பின் பிறப்பிடமாய், பாசத்தின் இருப்பிடமாய், பண்பின் சிகரமாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எங்களைப் பேணிக் காத்தீர்களே தாயே! எங்கள் எதிர்காலம் பற்றி தங்கள் உள்ளத்தில் உதிர்த்த கற்பனைகள் நிஜமான வேளையில் நீங்கள் எங்களுடன் இல்லையே தாயே!

நினைத்து நினைத்து மனம்துடித்தோம், அளவில்லாக் கண்ணீரை விழிசனிலே நிறைத்து விட்டு அணையாத ஜோதியென ஒளியேற்றிச் சென்றுவிட்டீர்களே தாயே!

ஐந்து ஆண்டுகள் உருண்டோடிப் போய்விட்ட போதிலும் தங்கள் அழகிய திருவுருவம் எங்கள் நெஞ்சத்தில் என்றும் அணையாத் தீபமாய் ஒளி வீசிக்கொண்டிருக்கும் தாயே!

தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்,

- பிள்ளைகள்.

ஏறாவூர்- 4 குறிச்சி. (4809)

ஈராண்டு மறைந்தாலும் ஆறவில்லை எம்துயர்
மலர்ந்து மறைந்தாலும் மறவாத உன் தொண்டு
திசை எங்கும் சேவை உள்ளத்தால்
உயர்ந்து நின்றாய்
மக்களின் மனதினிலே மாறாது காணாதையா
அசந்த வேளையிலே எம்மை அதிர வைத்து
மறந்து விட்டாயே - ஐயா
தீராத துயரமதில் உம் தென்புடனே
ஆறுகின்றோம்.

என்றும் உங்களை நினைவு கொள்ளும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்,
நண்பர்கள்.

மதவடி,
பொலிகண்டி.

[4818]

## நினைவு கூருகின்றோம் ... 1993-05-09

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ். உடுப்பிட்டியில் இராணுவ அதிகாரி மென்டீஸ்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

நித்தி [கந்தையா அபிமன்னசிங்கம் - இலந்தைக்காடு, வல்வெட்டித்துறை - யாழ்]

வல்வெட்டித்துறைப் பகுதி மீது முற்றுகை மேற்கொண்ட சிறிலங்கா இராணுவத்தினரால் பரவலாகவும், பொலிகண்டி நூல் நிலையத்தினுள் அடைத்து வைத்து-குண்டு வைத்தும் படுகொலை செய்யப்பட்ட 90 தமிழர்கள்

1988ஆம் ஆண்டு யாழ். கச்சாயில் இந்தியப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

லெப். நிதி/இராமேஸ்வரன் [முருகேசம்பிள்ளை இராமேஸ்வரன் - அல்லாரை தெற்கு, மீசாலை, சாவகச்சேரி - யாழ்]

1989ஆம் ஆண்டு யாழ். மயிலிட்டியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளர் -

சோதி [கனகசபை சண்முகசோதி - தையிட்டி, காங்கேசன்துறை - யாழ்.]

1991ஆம் ஆண்டு திருமலை - கந்தளாய் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த -

லெப். ஜனகன் [கதிர்காமத்தம்பி செல்வரட்ணம் - தம்பலகமம் - திருமலை]

வவுனியா - கோழியாகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

மனோஜ் [கந்தையா ஜெயக்குமார் - குடத்தனை மேற்கு, மருதங்கேணி, வடமராட்சி கிழக்கு - யாழ்.]

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

பெருமாள் [பரமகுரு தெய்வேந்திரன் - இன்பருட்டி, பருத்தித்துறை - யாழ்.]

அம்பாறை - அக்கரைப்பற்று பனங்காட்டுப் பகுதியில் முகாமின் முன்பாகவுள்ள வீதியால் சென்று கொண்டிருந்தபொழுது சிறிலங்காசிறப்பு அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

மட்டு நகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின்போது சுட்டுக் கொல்லப்பட்ட கொம்மாந்துறை சந்தை வீதியைச் சேர்ந்த தமிழ்ப்பெண் மற்றும் மாவடிவேம்பைச் சேர்ந்த 2 தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு யாழ். கொடிகாமம் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த -

2-ம் லெப். மாவி/கண்ணன் [நாகலிங்கம் பகீரதன் - மீசாலை தெற்கு, சாவகச்சேரி - யாழ்.]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-6590]

நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

வீட்டு அடுப்பில் கனல் தணியும்போதுதான் விண்மீன்களுடன் உறவு கொள்ளத் துடிக்கிறோம்.

- ஜார்ஜ் மெரெடித்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 09-05-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## புதிய ஜனாதிபதியின் நிலைப்பாடு என்ன?

"இதுவரை காலமும் தீர்வு காணப்படாதுள்ள வடக்கு கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண வேண்டும். இதுவே இன்று நம் மீதுள்ள முக்கிய பிரச்சினை. இதனை நான் நன்கு உணர்ந்துள்ளேன்." இவ்வாறு சிறிலங்காவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் திரு. டி. பி. விஜயதுங்கா தெரிவித்தார்.

இதனை மேலும் வற்புறுத்துமாப்போல் இருந்தது; பதவி ஏற்ற பின்னர் அவர் உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்தியாளர் மாநாட்டில் "வடக்குக் கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்க விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனுடனும் பேசத் தயாராக உள்ளது" எனத் தெரிவித்தமை ஆகும்.

திரு. டி. பி. விஜயதுங்காவின் இப்பேச்சானது இலங்கையில் இன்று இடம்பெற்று வரும் அனேக பிரச்சினைகளுக்கு இனப்பிரச்சினையே காரணம் என்பதை அவர் தெளிவாகப் புரிந்து கொண்டிருப்பதை உணர்த்துமாப்போல் உள்ளது. இந்நிலையில், திரு. டி பி. விஜயதுங்காவின் இவ் அறிவிப்புக்கள் முக்கியமானவையாகத் தென்படினும், இதே உரையிலும், பத்திரிகையாளர் மாநாட்டிலும் அவர் தெரிவித்த வேறு கருத்துக்கள் இவரும் பழைய அரசியல் தலைமைகளின் நிலைப்பாட்டில் இருந்து மாறவில்லை என்பதை உணர்த்துமாப் போன்றே தென்படுகின்றது.

"எம் முன்னே இன்று 'பயங்கரவாதம்' உள்ளது. இதனை எப்படியும் விரட்டி அடிப்பேன்" என்பதும், 'விடுதலைப் புலிகள் இலங்கையில் ஆயுதங்களை வைத்திருக்க முடியாது. எனவே அவர்களை நிராயுதபாணிகள் ஆக்க வேண்டும்' என்பதும் இனப்பிரச்சினையில் இவரது வரையறைகளை வெளிக்காட்டுமாப்போல் தெரிகின்றது.

இந்நிலையில் பழைய ஜனாதிபதிகள்போலவே புதிய ஜனாதிபதியும் இனப்பிரச்சினைத் தீர்வுகுறித்துப் புதிதாக எதையும் கூறிவிடவில்லை என்றே எண்ண வைக்கின்றது. ஆனால், புதிய ஜனாதி

# வடக்கு கிழக்கு பிரச்சினை தீர்ப்பது மிக அவசியம்

### - டி. பி. விஜயதுங்கா

(கொழும்பு)

இது காலவரை தீர்க்கப்படாதுள்ள வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காணுதல் வேண்டும் என்பது பற்றி நான் உணர்ந்துள்ளேன். தேசிய நலனில் இதற்கு தீர்வொன்றைக் காணுதல் அவசியமாகும் என சிறிலங்காவின் புதிய ஜனாதிபதி டி.பி. விஜய துங்கா தெரிவித்தார்

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண இலங்கையில் வாழும் சகல இன மக்களும் ஒத்துழைப்புநல்க வேண்டும் தேசியம் என்ற வகையில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வொன்றைக்காண எமக்கு இயலாத தொன்றல்ல.

அதிகார வெறிக்கும், சகிப்புத்தன்மை இன்மைக்கும் இடமளியாது புதிய சமூக அமைப்பை உருவாக்க பாடுபடவுள்ளேன். நாட்டை வழிநடத்தும் பொறுப்பை பணிவோடு ஏற்றுக்கொள்கிறேன்.

அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் எம்மோடு இணைந்து எமது இலட்சியங்களை அடைய முயலவேண்டும். பாராளுமன்றஉறுப்பினர்களின் நெருங்கிய ஒத்துழைப்புடன் எனது கடமைகளை நிறைவேற்றுவேன். நல்லெண்ண அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் எமக்கு வழிகாட்டிகளாக இருப்பர் என நம்புகிறேன். மக்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்கு நான் துரோகமிழைக்கமாட்டேன் சாதாரண மக்களின் அபிலாசைகளை நான் அறிவேன். உரியவர்க்கே மதிப்பளிக்கவேண்டும் என்பது எனது நீண்டகால கடப்பாடு என அவர் மேலும் தெரிவித்தார்.

## ரூபவாகினியில் பிரசாரம்; நேரம் ஒதுக்க கோரிக்கை

(கொழும்பு)

மாகாணசபைத்தேர்தல் பிரசாரத்துக்காக வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றில் தமக்கு நேரம் ஒதுக்கித் தரப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

பிரேமதாசா, லலித் ஆகியோரது மரணத்தினால் தேர்தல் பிரசார வேலைகள் பாதிக்கப்பட்டிருந்தன என்றும் இதனாலேயே மேற்படி ஏற்பாட்டைச் செய்யும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் ஐக்கிய தேசிய கட்சி ஜனாதிபதி மரணம் தொடர்பான பதாகைகள் மூலம் தேர்தல் பிரசாரம் செய்து வருகிறது. எனவே இப்பதாகைகளை உடனடியாக அகற்ற வேண்டும் என்றும் வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைத் தீர்வு

## கட்சியில் பிளவை தடுக்க விஜயதுங்காவிற்கு பதவி

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில் பலம்வாய்ந்த தலைவர் ஒருவர் இன்மையே டி.பி. விஜயதுங்கா ஜனாதிபதியாக முடிந்தமைக்கு காரணம் என அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

இவரைத் தவிர வேறு எவருக்கு இப்பதவி கொடுக்கப்பட்டாலும் ஐக்கிய தேசியக் கட்சி பல கூறுகளாக உடைந்திருக்கும் எனவும் இவருக்கு பதவியை வழங்குவதன் மூலமே கட்சியைக் காப்பாற்ற முடியும் எனவும் உணர்ந்து கொண்டதன் மூலமே ஐக்கிய தேசியக்கட்சி இவரை ஏகமனதாக தெரிவு செய்தது எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

## விஜயதுங்கா ஆட்சியில் முன்னேற்றம் ஏற்படாது

(கொழும்பு)

புதிய ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவின் அடுத்த 18 மாதகால ஆட்சியின்போது இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் பெரிதான முன்னேற்றம் ஏதும் ஏற்படக்கூடிய சாத்தியமில்லை என கொழும்புப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சரவணமுத்து பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் உள்ள பிரச்சினைக்கான தீர்வில் டி. பி. விஜயதுங்க முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் முயற்சிகளில் இருந்து வேறுபடுவாரா என்று கேட்கப்பட்ட போதே அவர் இவ்வாறு கூறினார். ஐ. தே. க. உட்பட பல முக்கிய சிங்களக் கட்சிகளிடம் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டம் ஏதும் இல்லை,

தீர்வில் அரசியல் ரீதியான பெரும் முன்னேற்றங்கள் எதையும் எதிர்பார்க்க முடியாது என்று பேராசிரியர் சரவணமுத்து மேலும் தெரிவித்தார்.

## 200 தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைது

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா கொலை தொடர்பாக இருநூறுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அவசரகால சட்ட விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களிடமிருந்து தகவல் பெறுவதற்காக மேலதிக விசாரணை நடாத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை லலித் கொலை

க்கு உதவுவதற்காகவரவழைக்கப்பட்ட ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிஸ் குழுவினர் ஜனாதிபதி பிரேமதாசா கொலை தொடர்பான புலனாய்விலும் ஈடுபட்டிருப்பதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸ் அதிகாரியான அமரசேன ராஜபக்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், நகரின் வெவ்வேறு பகுதிகளுக்கு நேரடி விஜயங்களை மேற்கொண்டஸ்கொட்லண்ட்யார்ட் குழுவினருக்கு பலபுதிய தகவல்

## பாராளுமன்ற முறையை மீளமைக்க வற்புறுத்து

(கொழும்பு)

புதிய ஜனாதிபதியாக டி.பி. விஜயதுங்கா தெரிவு செய்யப்பட்டதையடுத்து அவருக்கு ஆளும்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாராட்டு தெரிவித்து உரையாற்றினர்.

எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தனது உரையில், பல ஆண்டு அனுபவம் உள்ள டி. பி. விஜேதுங்கா கட்சிக்கப்பால் நின்று நாட்டிற்கு சேவையாற்றுவார் என நம்பிக்கை வெளியிட்டார். கடந்த காலங்களில் நாட்டில் சிறந்த முறையில் செயற்பட்ட ஜனநாயக பாராளுமன்ற முறை மீள அமைப்பதற்கான அவசியத்தையும் திருமதி பண்டாரநாயக்கா தனது உரையில் வலியுறுத்தினார்.

மேலும் ஜனநாயகத்தை கௌரவிக்காமையினால் ஜே. ஆர். ஜயவர்த்தனா ஆட்சி, ஆர். பிரேமதாசா ஆட்சி என்பவற்றில் நாடு பல பாரிய பிரச்சினைகளை எதிர் கொண்டதாக கூறினார்.

அவசரகால சட்டம் அகற்றப்பட வேண்டும் என்றும் மனித உரிமை மீறும் சட்டங்களை சட்ட புத்தகங்களில் இருந்து அகற்றவேண்டும் என்றும் வேண்டுகோள்விடுத்தார்

## 20யார் தூரத்திற்கு முன்பு கரும்புகை கிளம்பியது

### பிரேமா கொலை வழக்கில் சாட்சியம்

காலஞ் சென்ற சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் மரணம் தொடர்பாக பெற்றோலியக் கூட்டுத்தாபன இலிகிதர் விதாரண ராலலாகே. புஞ்சி அப்புஹாமி (47 வயது) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

மேதின ஊர்வலத்தில் கப்பல் கூட்டுத்தாபன ஊழியர்கள் முதலாவதாக முன்னே சென்றனர். அதனை அடுத்து தேசிய சேவா சங்க உறுப்பினர்கள் சென்றனர். ஜனாதிபதி சிறிய ஜீப்வண்டியொன்றில் ஏறி பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களுடன் ஊர்வலத்திற்கு முன்னே சென்றார்

பின்னர் அவர் ஜீப் வண்டியில் இருந்து இறங்கி ஆமர் வீதி சந்தியில் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களுடன் கதைத்துக் கொண்டு இருப்பதைக் கண்டேன். அப்போது நேரம் 12 45 மணியை நெருங்கியிருந்தது.

நான் நின்று கொண்டிருந்த இடத்திற்கும் ஜனாதிபதி நின்றிருந்த இடத்திற்கும் 20 யார்தூரம் இருக்கும் அப்போது திடீரென பெரும் வெடிஓசை ஒன்று கேட்டது. அதை அடுத்து மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடுவதை கண்டேன். நான் ஜனாதிபதி நின்றிருந்த இடத்திற்குச் சென்றேன். அங்கு அவரைக் காணவில்லை.

றொனி குணசிங்ஹ, சிறிமல் பெரேரா என்ற பொலிஸ் உத்தியோகஸ்தரும் மொஹிடீனும் இரத்த வெள்ளத்தில் வீழ்ந்திருப்பதைக் கண்டேன். குற்றுயிராக இருந்த றொனீ குணசிங்ஹ, சிறிமல்பெரேரா, மொஹீடீன் உட்பட காயமடைந்தவர்களை பொலிசாரின்

தது. அதற்குச் சற்றுத்தூரம் தள்ளி இடுப்பு உடைத்தெறியப்பட்ட நிலையில் சடலமொன்று கிடப்பதையும் கண்டேன். அந்த சடலத்தைத் தொட வேண்டாம் என கத்தி அங்கிருந்தோரை தடுத்தேன் பாதையின் வலது புறமாக நிறுத்தப்பட்டிருந்த ஜீப்வண்டிக்கு பக்கத்தில் மனிதத்தலை ஒன்று கிடப்பதைக்கண்டேன். அத்தலையை நான் பொலிஸ் வாகனத்தில் ஒப்படைத்தேன் அதன் பின் சோர்வுடன் அந்தஇடத்தில்நின்றேன்.

ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த செனிவிரத்தின பண்டார கூறியதாவது: ஜனாதிபதி ஆமர் வீதியில் ஊர்வலத்தை ஒழுங்கு செய்து கொண்டு இருந்தார். அவர் சுமார் 15 நிமிடம் ஊர்வலத்தை ஒழுங்குபடுத்தும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அப்போது மாபெரும் ஓசையுடன் வெடிச்சத்தமொன்று கேட்டது. கறுப்புப் புகை மேலே எழும்பியது. சனக்கூட்டம் சிதறி ஓடியது. காயமடைந்தவர்கள் ஓலமிட்டனர். பலர் ஆங்காங்கே உயிர் துறந்தனர்.

அவரின் உடலை துளைத்தவாறு பெருங்காயங்கள் காணப்பட்டன. நான் ஜனாதிபதியின் சடலத்தை அடையாளம் கண்டு கொண்டேன். அப்பொழுது சடலத்தில் பெரும் அழிவுகள் நேர்ந்திருந்தன.

உடுத்திருந்த சேட், கைநீண்ட மேல் பெனியன், தலைமுடி இவைகள் மூலம் தான் ஜனாதிபதியின் சடலத்தை அடையாளம் கண்டேன்.

ஆஸ்பத்திரியில் காயமடை

என்பதை அவர் தெளிவாகப் புரிந்து கொண்டிருப்பதை உணர்த்துமாப்போல் உள்ளது. இந்நிலையில், திரு. டி பி. விஜயதுங்காவின் இவ் அறிவிப்புக்கள் முக்கியமானவையாகத் தென்படினும், இதே உரையிலும், பத்திரிகையாளர் மாநாட்டிலும் அவர் தெரிவித்த வேறு கருத்துக்கள் இவரும் பழைய அரசியல் தலைமைகளின் நிலைப்பாட்டில் இருந்து மாறவில்லை என்பதை உணர்த்துமாப் போன்றே தென்படுகின்றது.

''எம் முன்னே இன்று 'பயங்கரவாதம்' உள்ளது. இதனை எப்படியும் விரட்டி அடிப்பேன்'' என்பதும், 'விடுதலைப் புலிகள் இலங்கையில் ஆயுதங்களை வைத்திருக்க முடியாது. எனவே அவர்களை நிராயுதபாணிகள் ஆக்க வேண்டும்' என்பதும் இனப்பிரச்சினையில் இவரது வரையறைகளை வெளிக்காட்டுமாப்போல் தெரிகின்றது.

இந்நிலையில் பழைய ஜனாதிபதிகள்போலவே புதிய ஜனாதிபதியும் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்துப் புதிதாக எதையும் கூறிவிடவில்லை என்றே எண்ண வைக்கின்றது. ஆனால், புதிய ஜனாதிபதியின் பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்ட செய்தியாளர்கள் குறிப்பிட்டுள்ளது போல், பழைய பாணியில் அல்லது வித்தியாசமான பாணியில் திரு. டி.பி விஜயதுங்கா பதில் அளித்துள்ளார் என்பதே சரியானதாகும்.

ஏனெனில், புதிய ஜனாதிபதியின் பழைய நிலைப்பாடானது, வடக்கு - கிழக்கில் இனப்பிரச்சினை என்பதே இல்லை என்பதும், வடக்குக் கிழக்கில் பெரும் போர் நடைபெறவில்லை என்பதுமாகும். இது குறித்து ஒரு தடவை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் என்ற ரீதியில் பாராளுமன்றத்தில் பிரஸ்தாபித்து எதிர்க்கட்சிகளின் பலமான கண்டனத்திற்கும் புதிய ஜனாதிபதி உள்ளாகியிருந்தார் என்பது குறிப்பிடக்கூடியதாகும்.

ஆனால், புதிய ஜனாதிபதியாகப் பதவி ஏற்றபின் சற்று தனது நிலைப்பாட்டைமாற்றி வடக்கு - கிழக்கில் பிரச்சினை உள்ளது. ஆனால், அது 'பயங்கரவாதப் பிரச்சினை' என்ற தொனிபடப் பேசியுள்ளார். ஆனால், அது வடக்கு - கிழக்கில் நடைபெறும் தமிழரின் விடுதலைக்கான ஆயுதப்போராட்டத்திற்கு ஒருபோதும் முடிவையோ, அன்றித் தீர்வையோ கொண்டுவந்து விடப்போவதில்லை.

முதலில் வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று காணப்பட வேண்டும் என்றால் தமிழர் தேசியத்தையும், தமிழர் தாயகத்தையும் சிறிலங்கா அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதன் பின்னர் தமிழர் அப்பகுதியில் பாதுகாப்புடனும், கௌரவத்துடனும் வாழக்கூடியதான ஓர் அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்ளத் தயாராக வேண்டும்.

இதை விடுத்துத் தமிழர் தேசிய இனப்போராட்டத்தை ஒரு 'பயங்கரவாத' நடவடிக்கை எனக் கூறிக் கொண்டு பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முற்படும் எவரும் முதலில் தமிழர்களின் அடிப்படையான பிரச்சினையைத் திறந்த மனதுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். இரண்டாவதாக பௌத்த பேரினவாதச் சிந்தனைகளில் இருந்து விடுபட்டு தமிழரின் நியாயபூர்வ உரிமைகளை வழங்க தயாராக வேண்டும். அப்பொழுதே பிரச்சினையைத் தீர்க்க முடியும். அதைவிடுத்து திரு. டி. பி. விஜயதுங்கா கூறுவதுபோல் தலைவர்களுடன் தலைவர்கள் பேசுவதால் மட்டும் பிரச்சினை தீர்ந்துவிடப் போவதில்லை.

புதிய ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவின் அடுத்த 18 மாதகால ஆட்சியின்போது இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் பெரிதான முன்னேற்றம் ஏதும் ஏற்படக்கூடிய சாத்தியமில்லை என கொழும்புப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சரவணமுத்து பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் உள்ள பிரச்சினைக்கான தீர்வில் டி. பி. விஜயதுங்க முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் முயற்சிகளில் இருந்து வேறுபடுவாரா என்று கேட்கப்பட்ட போதே அவர் இவ்வாறு கூறினார். ஐ. தே. க. உட்பட பல முக்கிய சிங்களக் கட்சிகளிடம் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டம் ஏதும் இல்லை, இதனால் அடுத்த 18 மாதகாலத்தில் இனப்பிரச்சினைத்

யும் எதிர்பார்க்க முடியாது என்று பேராசிரியர் சரவணமுத்து மேலும் தெரிவித்தார்.

தேசியக்கட்சி இவரை ஏகமனதாக தெரிவு செய்தது எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

# 200 தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைது

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா கொலை தொடர்பாக இருநூறுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அவசரகால சட்ட விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களிடமிருந்து தகவல் பெறுவதற்காக மேலதிக விசாரணை நடாத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை லலித் கொலை தொடர்பான விசாரணைகளில் சிறிலங்கா பொலிசாருக்கு உதவுவதற்காகவரவழைக்கப்பட்ட ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிஸ் குழுவினர் ஜனாதிபதி பிரேமதாசா கொலை தொடர்பான புலனாய்விலும் ஈடுபட்டிருப்பதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸ் அதிகாரியான அமரசேன ராஜபக்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், நகரின் வெவ்வேறு பகுதிகளுக்கு நேரடி விஜயங்களை மேற்கொண்டஸ்கொட்லண்ட்யார்ட் குழுவினருக்கு பலபுதிய தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

தைக் கண்டேன். அப்போது நேரம் 12 45 மணியை நெருங்கியிருந்தது.

நான் நின்று கொண்டிருந்த இடத்திற்கும் ஜனாதிபதி நின்றிருந்த இடத்திற்கும் 20 யார்தூரம் இருக்கும் அப்போது திடீரென பெரும் வெடிஓசை ஒன்று கேட்டது. அதை அடுத்து மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடுவதை கண்டேன். நான் ஜனாதிபதி நின்றிருந்த இடத்திற்குச் சென்றேன். அங்கு அவரைக் காணவில்லை.

றொனி குணசிங்ஹ, சிறிமல் பெரேரா என்ற பொலிஸ் உத்தியோகஸ்தரும் மொஹிடீனும் இரத்த வெள்ளத்தில் வீழ்ந்திருப்பதைக் கண்டேன். குற்றுயிராக இருந்த றொனீ குணசிங்ஹ, சிறிமல்பெரேரா, மொஹீடீன் உட்பட காயமடைந்தவர்களை பொலிசாரின் உதவியுடன் வாகனங்களில் ஏற்றி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தேன்.

அந்த இடத்தில் துவிச்சக்கர வண்டி ஒன்றும் விழுந்து கிடந்

யில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அப்போது மாபெரும் ஓசையுடன் வெடிச்சத்தமொன்று கேட்டது. கறுப்புப் புகை மேலே எழும்பியது. சனக்கூட்டம் சிதறி ஓடியது. காயமடைந்தவர்கள் ஓலமிட்டனர். பலர் ஆங்காங்கே உயிர் துறந்தனர்.

அவரின் உடலை துளைத்தவாறு பெருங்காயங்கள் காணப்பட்டன. நான் ஜனாதிபதியின் சடலத்தை அடையாளம் கண்டு கொண்டேன். அப்பொழுது சடலத்தில் பெரும் அழிவுகள் நேர்ந்திருந்தன.

உடுத்திருந்த சேட், கைநீண்ட மேல் பெனியன், தலைமுடி இவைகள் மூலம் தான் ஜனாதிபதியின் சடலத்தை அடையாளம் கண்டேன்.

ஆஸ்பத்திரியில் காயமடைந்துள்ளோர் சாட்சியமளிக்க முடியுமான நிலைமை ஏற்பட்டதும் மேற்கொண்டு விசாரணை நடைபெறும் என மேலதிக நீதிவான் கூறினார்

# அரசாங்கசார்புகுண்டர்களால் எதிர்க்கட்சிகள் அச்சம்

(கொழும்பு)

அரச சார்புக்குண்டர் கோஷ்டியினர் எதிர்க்கட்சிகள் மேற்கொண்டுவரும் தேர்தல் பிரச்சாரத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளனர் எனவும், இக்குழுவினர் வன்முறைத் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் எதிர்கட்சிகள் தெரிவிக்கின்றன.

இக்குண்டர் கோஷ்டிகளது அச்சுறுத்தல் குறித்து எதிர்க்கட்சிகள் தேர்தல் ஆணையாளரிடம் முறையிட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் கொலையைத் தொடர்ந்து இவ்வன்முறைகள் மிகவேகமாகப் பரவி வருவதாகவும் குறிப்பாக மாத்தறைப் பகுதியிலேயே இத்தாக்குதல்கள் அதிகமாக நிகழ்வதாகவும் ராவய பத்திரிகையின் செய்தியாளர் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாத்தறை மாவட்ட உறுப்பினர் மங்கள சமரவீரவும், ஏனைய உறுப்பினர்களும் தேர்தல் ஆணையாளரைச் சந்திக்கவும், பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டவும் தயாராக இருப்பதாகவும் கூறப்படுகின்றது

1988, 1989 ஆகிய காலப் பகுதிகளில் இடம்பெற்றது போன்றே தற்போதும் வன்முறைகள் நடைபெற்று வருவதாகவும், இவ்வாறான வன்முறைத்தாக்குதல்கள் ஏனைய மாவட்டங்களுக்கும் பரவலாம் என்றும் எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

## கொலைப் பட்டியலில் எதிர்க்கட்சித் தலைவர்கள்

### தேர்தல் ஆணையாளரிடம் முறையீடு

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பாக மேலும் பல அரசியல் கொலைகள் இடம்பெறவுள்ளதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிப் பேச்சாளர் டாக்டர் விக்கிரம வீரசூரியா தெரிவித்தார்.

காமினி திசாநாயக்காவின் இல்லத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தேர்தல் ஆணையாளர் சந்திரானந்தா டி சில்வா மற்றும் பொலிஸ்மா அதிபர் எனர்ஸ்ட் பெரேராவுக்கும் தான் இது குறித்து அறிவித்திருப்பதாக விக்கிரம வீரசூரியா மேலும் கூறினார்.

சிறிமாவோ பண்டாரநாயக்கா, காமினி திசாநாயக்கா, சுதந்திரக்கட்சி தேசிய அமைப்பாளர் அநுரா பண்டாரநாயக்கா, அதேகட்சியைச் சேர்ந்த சந்திரிக்கா குமாரதுங்கா, ஜி. எம். பிரேமச்சந்திரா, தினேஷ் குணவர்தனா ஆகிய எதிர்க்கட்சிகளின் தலைவர்களே கொலை செய்யப்படவுள்ளதாகத் தனக்குத் தகவல் கிடைத்திருப்பதாக டாக்டர் விக்கிரம வீரசூரியா தெரிவித்தார்.

தகவல் மூலத்தை அவர் தெரியப்படுத்த மறுத்துவிட்டார்.

மேற்படி கொலைப் பட்டியல் குறித்து பொலிஸ்மா அதிபர், அமைச்சர் ரணில்விக்கிரமசிங்கா, கே. எஸ். சொகிஸ் ஆகியோர் முன்னிலையில் தான் தேர்தல் ஆணையாளரிடம் கூறியபோது, தேர்தல் ஆணையாளர் சந்திரானந்தா டி சில்வா 'தலையில் கை வைத்ததாக'வும் டாக்டர் விக்கிரம வீரசூரியா தெரிவித்தார்.

## செம்பியன்பற்றில் சுகாதார நிலையம்

[வடமராட்சி கிழக்கு]

செம்பியன் பற்றில் ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திணைக்களத்தினால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது

இச்சிகிச்சை நிலையம் வார நாட்களில் தினமும் செயற்படும்.

மாதத்திற்குஇருதடவை கர்ப்பவதிகளுக்கும், குழந்தைகளுக்குமான 'கிளினிக்'குகளும் நடைபெறவுள்ளன.

பருத்தித்துறை மாவட்ட சுகாதார அதிகாரி பிரிவின் கீழ் இந்நிலையம் செயற்படவுள்ளது. [36]

உற்பத்தி எழுச்சி வாரத்தில்

## கடற்புலிகள் நடாத்திய போட்டிகளின் முடிவுகள்

உற்பத்தி எழுச்சி வாரத்தை முன்னிட்டு கடற்புலிகளின் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் வட்ட ரீதியாக நடாத்திய போட்டிகளுக்கான இறுதிச் சுற்றுப் போட்டிகள் கடந்த 30-ம் திகதி வடமராட்சி வடக்கில் நடாத்தப்பட்டது

இப்போட்டியில் வெற்றியீட்டியவர்களின் விபரம்

### 1) கிடுகு பின்னல்:-

1-ம் பரிசு ச. சுசீலா தேவி குடத்தனை மேற்கு

2-ம் பரிசு யா. பற்றியா நாயகி அல்வாய் மேற்கு

3-ம் பரிசு க. ரஞ்சனிதேவி அராலி மேற்கு

### 2) தும்புத்தடி தயாரித்தல்:-

1-ம் பரிசு கா. குணரத்தினம் அராலி மேற்கு

2-ம் பரிசு ந. ஐயாத்துரை தெனி ஒழுங்கை, வல்வெட்டித்துறை

3-ம் பரிசு க. மகேந்திரராசா தொண்டமானாறு

### 3) நீச்சல்:-

1-ம் பரிசு நா. விஸ்வரத்தினம் ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை

2-ம் பரிசு இ. ரதீஸ்வரன் நாகர்கோவில் மேற்கு

3-ம் பரிசு க இராசலிங்கம் நாகர்கோவில் மேற்கு

### 4) விளக்குமாறு தயாரித்தல்:-

1-ம் பரிசு கா. குணரத்தினம் அராலி மேற்கு

2-ம் பரிசு க. மகேந்திரராசா தொண்டமானாறு

3-ம் பரிசு சி. செல்லத்துரை வடிஸ்லோன் பீலிக்ஸ்கெயில் அம்பன் மருதங்கேணி

### 5) குட்டான் தயாரித்தல்:-

1-ம் பரிசு வே. விமலேஸ்வரி அராலி மேற்கு

2-ம் பரிசு க. ரஞ்சினிதேவி அராலி மேற்கு

3-ம் பரிசு கு. விமலாதேவி அராலி மேற்கு

### 6) கயிறு திரித்தல்:-

1-ம் பரிசு சி. செல்லத்துரை அம்பன்

2-ம் பரிசு ந. ரஞ்சினி அராலி மேற்கு

3-ம் பரிசு ந. சிவராகினி அராலி மேற்கு

(தொடரும்)

## முறைசாராக் கல்வி ஆங்கிலம்

(கொழும்புத்துறை)

யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி முறைசாராக்கல்வி ஆங்கிலம் பயில விரும்புவோர் பயிற்சிக்குரிய விண்ணப்பங்கள் நாளை 10ஆம் திகதி திங்கட்கிழமை வரை ஏற்றுக் கொள்ளப்படும். எனக்கல்லூரி அதிபர் திரு. இ, மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமான மேலதிக விபரங்களைக் காரியாலய நேரத்தில் காரியாலயத்தில் நேரில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது (24)

ஈழநாதம்

# மீண்டும் 'ரயர்' யுகம் எதிர்க்கட்சிகள் புகார்

(கொழும்பு)
தென்பகுதியிலுள்ள பிரதான சந்தியொன்றில் ரயர் போட்டு எரிக்கப்பட்ட சடலம் ஒன்றுகாணப்படுவதாக எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் புகார் செய்துள்ளார். இவ்விடயம் பொலிசாருக்குத் தெரிவிக்கப்பட்டும் அவர்கள் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

தென் பகுதியில் மீண்டும் 'ரயர் யுகம்' தோன்றிவிட்டது எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் அச்சுறுத்தப்பட்டும் தாக்கப்பட்டும் உள்ளனர். இதனால் மக்கள் பீதியடைந்துளனர் என பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

சென்றமுறை மாகாண சபைத் தேர்தலில் ஏற்பட்டது போன்ற வன்முறைகள் இம்முறையும் தலைதூக்கி இருப்பதாகவும், இது தொடர்பாக எதிர்க்கட்சிகள் தேர்தல் ஆணையாளரிடம் புகார் செய்துள்ளதாகவும், தெரிவிக்கப்படுகிறது. எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சிக் குண்டர்கள் தாக்குதல்களில் ஈடுபட்டுவருவதாகவும். இதனால் தேர்தல் பிரசார வேலையில் ஈடுபட முடியாதநிலை எதிர்க்கட்சிகளுக்கு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பேராதனை பல்கலைக்கழக வெளிவாரி கலைமுதற்தேர்வு-1992
பரீட்சை முடிவுகள் வெளியாகிவிட்டன.
பரீட்சை முடிவுகளை அறிவதற்கு
"வெளிவாரிப் பட்டப்படிப்புகள் கல்லூரி" யுடன்
தொடர்புகொள்ளவும்.

குறிப்பு: கலைமாணிப் பட்டப் படிப்புக்குரிய வகுப்புக்கள் எதிர்வரும் 15-05-93 (சனிக்கிழமை) ஆரம்பமாகும் என்பதனை அறியத் தருகின்றோம்.

பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[சி-6593]

AROD CARE AND BE FAIR

இலவச தொழிற் பயிற்சிகள்

ஊனமுற்றோருக்கான கீழ்க்கண்ட பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன:
★ தையல் வகுப்புக்கள்
★ பனை உற்பத்திப் பொருள்கள்
★ கதிரை பின்னல்
★ சைக்கிள் திருத்துதல்

## ஒன்றுகூடல்

யாழ். மாவட்ட அரசாங்க பாடசாலைகளின் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும் ஒன்றுகூடலும் இன்று யாழ். கனகரட்ணம் மத்தியமகா வித்தியாலயத்தில் காலை 9 30 மணியளவில் சங்கத்தலைவர் திரு. எஸ். இராமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. "ஈழத்தில் ஆங்கிலம்" என்னும் பொருள்பற்றி இளைப்பாறிய பேராசிரியர் திரு. நேசையா அவர்கள் கருத்துரை நிகழ்த்துவார். சகல பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களையும் பங்கு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

## கருத்தரங்கு

யாழ். கல்வித் திணைக்கள எழுதுவினைஞர்களுக்காக நாளை ஆரம்பமாக இருந்த கருத்தரங்கு மறுநாள் செவ்வாயன்று ஆரம்பமாகும் எனவும், தொடர்ந்து நான்கு தினங்கள் இக் கருத்தரங்கு நடத்தப்படும் எனவும் கடிதம் கிடைக்கப் பெற்றவர்களை தவறாது சமுகமளிக்கும்படியும் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் கோரியுள்ளன.

## "நிமிர்வு" வெளியீட்டு விழா

[யாழ்ப்பாணம்]
அகிலா பசுபதி (தூயவன்) எழுதிய 'நிமிர்வு' கவிதைத் தொகுதி வெளியீடு நாளை மாலை 4 00 மணிக்கு கல்வியங்காடு இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## சுந்தரின் மணிவிழா சிறப்புற நடந்தது

(யாழ்ப்பாணம்)
வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அவர்களின் மணிவிழா நேற்றுமுன்தினம் மாலை சிறப்புற நடைபெற்றது.

இந் நிகழ்வில் பெரும் திரளான மக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் இணுவில் சிவகாமி அம்மன் கோவிலில்நடைபெற்ற விசேட பூசையில் திரு.சுந்தரலிங்கம் தம்பதிகள் கலந்து கொண்ட பின் அவர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

பாடசாலை மாணவர்கள் "பான்ட்" மற்றும் நாதஸ்வர தவில் இசை முழங்க, மாணவர்கள் அணிவகுத்துச் செல்ல அவர் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டார்.

வீதி நெடுகிலும் கும்பம் வைத்து மலர்மாலை அணிவித்து மக்கள் அவரை கௌரவித்தனர்.

இணுவில் கந்தசாமி கோவிலை அண்மித்து அமைக்கப்பட்டிருந்த விசேடபந்தலை அடைந்ததும் மணிவிழா ஆரம்பமாகியது.

பல பெரியோர்கள், கல்விமான்கள் கல்வித்துறை சார்ந்தவர்கள் ஆகியோர் அவரை பாராட்டி உரைநிகழ்த்தினர்.

## வரதட்சணைக் கொடுமை வருடம் 4000 பேர் மரணம்

[சென்னை]
இந்திய நாடாளுமன்றத்தில் ஆண்டுதோறும் அளிக்கப்படும் தகவல்களின்படி 1987ஆம் ஆண்டில் வரதட்சணைக் கொடுமையால் உயிரிழந்தோர் எண்ணிக்கை சுமார் 2000 என்றும், ஆண்டுதோறும் இந்த எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போய் தற்போது 4000 ஐயும் தாண்டிவிட்டது என்றும், இதில் 49 பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்றும் சென்னை நீதிமன்ற நீதிபதி பிரதாப்சிங் கூறினார்.

மதுரையில் காஞ்சி பரமாச்சார்யாரின் நூற்றாண்டு விழாத் தொடக்கக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில் வரதட்சணை போன்ற சமுதாயக் கொடுமைகளை எதிர்த்துப் போராடும் படி இளைஞர்களைக் கேட்டுக்கொண்டார்.

## அ.தி.மு.க. அரசு கவிழ்ந்தால் காங்கிரஸ் பொறுப்பல்ல

(சென்னை)
தமிழ்நாட்டில் அ. இ. அ. தி. மு. க. அரசு கவிழ்ந்தால் அதற்கு காங்கிரஸ் கட்சி பொறுப்பு ஏற்காது என்று தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கூறியுள்ளார். இதே வேளை காங்கிரஸ் கட்சியின் உத்தியோக பூர்வ அறிவிப்பு ஒன்றில் அ. இ. அ. தி. மு. க. அரசைக் கவிழ்க்கும் நோக்கம் எதுவும் கட்சிக்கு கிடையாது எனறும், பாட்டாளி மக்கள் கட்சியுடன் காங்கிரஸ் கட்சி எந்த வகையிலும் தேர்தல் உடன்பாடோ, கூட்டணி உறவோ வைத்துக் கொள்ளாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பழநி இடைத்தேர்தல் ஆகஸ்டிற்கு ஒத்திவைப்பு

பழநி லோக்சபாத் தொகுதி இடைத்தேர்தல் பின்போடப்பட்டுள்ளது. இந்தத் தேர்தல் இம்மாதம் 19ஆம் திகதிக்குப் பதிலாக ஆகஸ்ட் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது பழநியில் கடுமையான வரட்சி நிலவுவதால் தேர்தலை ஒத்திவைப்பதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருக்கிறது.

இதேவேளை கேரள மாநில ஒட்டப்பாலம் லோக்சபாத் தொகுதி இடைத்தேர்தலும் சட்ட ஒழுங்கு நிலைமை காரணமாக ஆகஸ்ட் 19ஆம் திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளது

## வேதாரணியம்

பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் மூவரை தமிழக பொலிசார் கைது செய்துள்ளனர். அவர்கள் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் போல நடந்து கொள்வதாகவும் காவல் துறையினர் மேலும்

## தேர்தல் பிரசாரம் வெள்ளி முடியும்

மாகாண சபைத் தேர்தல் பிரசாரங்கள் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நள்ளிரவுடன் முடிவடையும் என தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீதர் திரையரங்கில்
In the Line of Duty
தினசரி மாலை 4 மணி, 6 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மாலை 4 மணி, 6 மணி
[சி-6575]

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்
அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு
சண்டிலிப்பாய்ப் பிரிவு

09-05-93-ல் நடைபெறவிருந்த மேற்படி பிரிவின் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு 23-05-93 பிற்பகல் 4.00 மணிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க, சண்டிலிப்பாய்ப் பிரிவுப் பணிமனையில் நடைபெறும்.

73, கண்டி வீதி, கௌரவ செயலாளர்
யாழ்ப்பாணம்.
07-05-1993.
[சி-6595]

தலையாழி - கொக்குவில்
இந்திரா சனசமூக நிலைய
வளர்ச்சிக்காக
நிதியுதவி நிகழ்ச்சி
★★ பொன்மாலைப்பொழுது ★★
இன்று 09-05-93 ஞாயிறு மாலை 6.00 மணி
இடம்; கொக்குவில் இந்துக்கல்லூரி அரங்கம்
பரத கலாகேந்திர மாணவர் அளிக்கும்
★★ பரத நாட்டியம் ★★
யாழ். சோட்டோக்கான் கராத்தே சங்கம் வழங்கும்
★★ கராத்தே கண்காட்சி ★★
புதிய பாடல்களுடன்
ராஜன்ஸ் இசைக் குழுவினரின்
இன்னிசை வார்ப்புகள்
நுழைவுச்சீட்டுக்கள் மண்டப வாயிலில்
விழா சிறக்க வாழ்த்துபவர்கள்:
ராஜா கிறீம் ஹவுஸ்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (4841)

## 2-ம் ஆண்டு நினைவு

பிறப்பு



இறப்பு

## பட்டப்படிப்புகள் கல்லூரி

148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[சி-6593]



AROD CARE AND BE FAIR

## இலவச தொழிற் பயிற்சிகள்

ஊனமுற்றோருக்கான கீழ்க்கண்ட பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன:

★ தையல் வகுப்புக்கள்

★ பனை உற்பத்திப் பொருள்கள்

★ கதிரை பின்னல்

★ சைக்கிள் திருத்துதல்

பயிற்சிபெற விரும்பும் ஊனமுற்றோர் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

★ பயிற்சிக்காலத்தில் உணவு வசதியும் தங்குமிட வசதியும் இலவசமாக அளிக்கப்படும்,

டாக்டர் N. சிவராசா
தலைவர்
ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்
16, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். [4838]



உழைப்பாளரை இழந்த பெண்களின்

## புனர்வாழ்வுக்கான ஆய்வுப்பட்டறை

COUNCIL OF NGOS, JAFFNA

மேற்படி ஆய்வுப்பட்டறையில் கலந்து கொள்ள விரும்பும் அரசசார்பற்ற நிறுவனங்கள் தங்களின் பெயர் விபரங்களுடன் இணைய பணிமனையில் உள்ள படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து 12-05-93 க்கு முன் எமக்கு அனுப்பி வைக்கவும்.

யாழ். மாவட்ட அரசசார்பற்ற
நிறுவனங்களின் இணையம்
100, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(சி/6592)



# HOT SPRING

## ஆங்கிலவார இதழுக்கான விளம்பரங்கள் யாவும்

ஈழநாதம் அலுவலகத்திலும்
விளம்பரப் பணிமனைகளிலும்
ஏற்றுக் கொள்ளப்படும்.

ஈழநாதம்,
31, மகேந்திரா வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு மே மாதம் 09 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


## கருத்தரங்கு

யாழ். கல்வித் திணைக்கள எழுதுவினைஞர்களுக்காக நாளை ஆரம்பமாக இருந்த கருத்தரங்கு மறுநாள் செவ்வாயன்று ஆரம்பமாகும் எனவும், தொடர்ந்து நான்கு தினங்கள் இக் கருத்தரங்கு நடத்தப்படும் எனவும் கடிதம் கிடைக்கப் பெற்றவர்களை தவறாது சமுகமளிக்கும்படியும் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் கோரியுள்ளன.

### ''நிமிர்வு'' வெளியீட்டு விழா

[யாழ்ப்பாணம்]

அகிலா பசுபதி (தூயவன்) எழுதிய 'நிமிர்வு' கவிதைத் தொகுதி வெளியீடு நாளை மாலை 4 00 மணிக்கு கல்வியங்காடு இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## ஒரே வீட்டில் 3சைக்கிள்கள் திருட்டு

(தொல்புரம்)

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ஒருவரினது வீட்டில் மூன்று சைக்கிள்கள் நள்ளிரவில் களவாடப்பட்டுள் ளன.

இச்சம்பவம் கடந்த வியாழன் அன்று நள்ளிரவு ஆனைக்கோட்டையைச் சேர்ந்த எஸ். சோமேஸ்வரன் என்பவரது வீட்டில்விடப்பட்டிருந்த 'றலி' சைக்கிள்கள் இரண்டும், 'இந்தியன் கீரோ' சைக்கிள் ஒன்றும் களவுபோயுள்ளன.

இக்களவைப் பற்றி தமிழீழ காவல்துறையினரிடம் புகார் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (41)

### வடமராட்சியில்

இந்நோயினால் பாதிப்படைந்துள்ளனர். அதேவேளை அம்பன் கிராமத்திலும் இந்நோய் பரவி வருகின்றது. [36]


வாடிக்கையாளருக்கு

## அறிவித்தல்

ஜோ. எகட்டன்
ஜெசித்தாராவின்
உணவுப் பார்சல்கள் தாமதமின்றி உடனடியாகக் கிடைக்கும்.

பகல் 11-30 மணிமுதல் 3-30 மணிவரை எல்லா உணவு வகை ஓடர்களும் துரித கதியில் கவனிக்கப்படும்.

ஜோ. எகட்டனின்
ஜெசித்தாரா உணவகம்
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)
சுண்டுக்குளி.

(சி-6569)


...யோக பூர்வ அறிவிப்பு ஒன் ...பட்டுள்ளது.

## பழநி இடைத்தேர்தல் ஆகஸ்ட்டிற்கு ஒத்திவைப்பு

பழநி லோக்சபாத் தொகுதி இடைத்தேர்தல் பின்போடப்பட்டுள்ளது. இந்தத் தேர்தல் இம்மாதம் 19ஆம் திகதிக்குப் பதிலாக ஆகஸ்ட் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது பழநியில் கடுமையான வரட்சி நிலவுவதால் தேர்தலை ஒத்திவைப்பதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருக்கிறது.

இதேவேளை கேரள மாநில ஒட்டப்பாலம் லோக்சபாத் தொகுதி இடைத்தேர்தலும் சட்ட ஒழுங்கு நிலைமை காரணமாக ஆகஸ்ட் 19ஆம் திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளது

### வேதாரணியம்

பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் மூவரை தமிழக பொலிசார் கைது செய்துள்ளனர். அவர்கள் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் போல நடந்து கொள்வதாகவும் காவல் துறையினர் மேலும் கூறினர்.

### தேர்தல் பிரசாரம் வெள்ளி முடியும்

மாகாண சபைத் தேர்தல் பிரசாரங்கள் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நள்ளிரவுடன் முடிவடையும் என தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

### இன்று

யோரின் இரண்டு சிறுகதைகளும், சோ. பத்மநாதனின் மொழிபெயர்ப்பில் 'வழிகாட்டி' என்ற சிறுகதையும் உள்ளன. சொக்கன் எழுதும் தொடர் கட்டுரையுடன், நா. யோகேந்திரநாதனின் கட்டுரையும் இடம்பெறுகின்றன. கவிஞர் காசிஆனந்தன் அவர்களின் 'க சி ஆனந்தன் கவிதைகள்' நூலின் மதிப்புரையை நாக. பத்மநாதனும், அடேல் ஆன் அவர்களின் 'விடுதலைப் புலிகளின் பெண்போராளிகள்' ஆங்கில நூலின் மதிப்புரையை நம்பியாரூரானும் எழுதியுள்ளனர். இவற்றுடன் போராளிகளின் பேனாவிலிருந்து பகுதியில் சுதாமதி, உதயன் ஆகியோரின் இரண்டு கவிதைகளையும் தாங்கி வெளிச்சம் 41வது இதழ் வெளிவருகின்றது.

### ஜே. வி. பி

திரு ஜகாத்தை தமது கட்சியில் இருந்து விலக்கப்பட்டுவிட்டார் என்று சோமவன்ச அமரசிங்கா கடிதம் ஒன்றை பி பி. ஸிக்கு எழுதியுள்ளது தொடர்பாக ஜகாத்திடம் கேட்கும்போது மேற்படி கருத்தை தெரிவித்தார்.

சோமவன்ச அமரசிங்கா தனியாக எமது அங்கத்தவர் ஒருவரை விலக்கி விடவோ ஒருவரை சேர்க்கவோ முடியாது எமது அணிக்குள் பல ஊடுருவல்கள் ஏற்பட்டுள்ளன. சதித்திட்டங்கள் இவை மூலம் தீட்டப்பட்டு வருகின்றன. இதனை திட்டமிட்டு நாம் தடுக்கஇவேண்டும். எனவே சகல அங்கத்தவரும் இதில் மிகவும் முனைப்பாக செயல்படுவார்கள் என நான் எதிர்பார்க்கிறேன் என ஜகாத் சேனதீர தெரிவித்தார்.

### அமைச்சின்

மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சு - அர்சிலி முகம்மது

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு - ஏ.ஆர்.எம். ஜெயவர்த்தனா

கல்வி, உயர்கல்வி அமைச்சு - எம்.பி.டி. பீரிஸ்

கலாசார அலுவல்கள் தகவல்துறை அமைச்சு - குணசேகர கே.ஏ.எஸ்

சூழல் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு செயலாளர் - தேவநேசன் நேசையா

சுகாதாரம் மகளிர் விவகார அமைச்சு செயலாளர் - ஜோ. பெர்னான்டோ

தொழில், தொழில் பயிற்சி அமைச்சு செயலாளர் -எஸ்.எஸ்.பி. ஜயசிங்ஹ

நீதி அமைச்சு செயலாளர் - வை எம்.பி.ஹேரத்

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு செயலாளர்-டபிள்யூ டி. ஆரியப்பெருமா

சுற்றுலாக் கிராமத் தொழில் அபிவிருத்தி - டபிள்யூ தென்னக்கோன்

கைத்தொழில், புடைவைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு செயலாளர் - ஹப்புதெனிய

தபால் தொலைத்தொடர்பு அமைச்சு செயலாளர் - ஏ.ஈ.டி. இசட். குணசேகர

இளைஞர் விவகாரம் விளையாட்டுத்துறை அமைச்சு செயலாளர் - கேணல் குடலிகம

புனர்வாழ்வு புனர்நிர்மாண சமூகநல அமைச்சு செயலாளர்- கிறிஸ்டி சில்வா

கைத்தொழில் விஞ்ஞானம் தொழில்நுட்ப அமைச்சு செயலாளர் - கே.ஏ.பெரேரா

பிரதம மந்திரியின் செயலாளர் - கே. ஏ.அபயசிங்க


பரத கலாகேந்திர மாணவர் அளிக்கும்

★★ பரத நாட்டியம் ★★

யாழ். சோட்டோக்கான் கராத்தே சங்கம் வழங்கும்

★★ கராத்தே கண்காட்சி ★★

புதிய பாடல்களுடன்

**ராஜன்ஸ்** இசைக் குழுவினரின்

இன்னிசை வார்ப்புகள்

நுழைவுச்சீட்டுக்கள் மண்டப வாயிலில்

விழா சிறக்க வாழ்த்துபவர்கள்:

ராஜா கிறீம் ஹவுஸ்

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (4841)


## 2-ம் ஆண்டு நினைவு

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 02 | 27 |
| - | - |
| 02 | 04 |
| - | - |
| 1922 | 1991 |



## மாதன் கந்தையா

1991-ல் தீவகத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையில் காலமான சரவணை மேற்கு 2-ம் வட்டாரத்தைச்சேர்ந்த மாதன்கந்தையா அவர்களது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி:- அந்தோனியாள்

பிள்ளைகள்:- நாகம்மா, சுப்பிரமணியம், கனகலிங்கம் (சவுதி), மகாலிங்கம், கமலாதேவி, சுந்தரலிங்கம் (சுவிஸ்), சண்முகம்பிள்ளை (ஆசிரியர்), லட்சுமி.

மருமக்கள்:- பொன்னையா, பூபதி, ஏகாம்பிகை, அந்தோனியாப்பிள்ளை, சண்முகலிங்கம், சந்திரா, பரமேஸ்வரி.

புகையிரதநிலைய விடுதி,
அத்தியடி, யாழ். (4840)

## உள்வந்தவெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 08-05-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9317

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

43-2524, 43-2666, 27-2034, 42-2323, 40-2829
42-3993, 22-5857, 26-1343, 42-7975, 24-0576
43-4065, 26-4726, 41-8292, 24-1495, 26-1349

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

22-9005, 28-1311, 26-8382, 26-3017, 26-1253
40-2573, 24-9609, 26-4727, 27-6583, 40-1688
27-8125